# தென் மாவட்டங்களில் கனமழை : அமைச்சர்கள் - கழகத்தினர் நிவாரணப் பணி!










தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் கனமழை பெய்ததைத் தொடர்ந்து தூத்துக்குடி மாவட்டம் முழுவதும் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான நிவாரணப் பணிகளை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் நிவாரணப் பொருட்களை வழங்கினார். உடன் அமைச்சர் கீதாஜீவன், அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் உள்ளனர்.



பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று (19.12.2023), திருநெல்வேலி, தூத்துக்குடியில் அதிகன மழையினால் சேதமடைந்த நெடுஞ்சாலைகளை ஆய்வு செய்தார். உடன், நெடுஞ்சாலைத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், தலைமைப் பொறியாளர்கள் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.




தூத்துக்குடி, நெல்லை மாவட்டங்களில் வெள்ள நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ள பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பால்பாக்கெடுகள் வழங்கினார். இந்நிகழ்வின்போது, கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் கார்த்திகேயன், நெடுஞ்சாலைத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், நெடுஞ்சாலைத்துறை, பொதுப்பணித்துறைத் தலைமைப் பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## நெல்லை மாவட்டத்தில் கனமழை!

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நிவாரணப் பணி!

### பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கல்!

நெல்லை, டிச. 20 -

நெல்லை மாவட்டத்தில் மழையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு த்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18ம் தேதி) பார்வையிட்டு சமாதானபுரம் பெல் பள்ளியில் தங்க வைக்கப்பட்டுள்ள நபர்களுக்கும், தச்சநல்லூர் வெல்கம் மஹாலில் தங்க வைக்கப்பட்டுள்ள நபர்களுக்கும் அடிப்படைத் தேவையான நிவாரண உதவிகளை வழங்கி சந்திப்பு பேருந்து நிலையத்தில் வெள்ள பாதிப்புகளை பார்வையிட்டார்கள்.

நெல்லை மாவட்டத்தில் கடந்த இரண்டு நாட்களில் பெய்த கனமழை காரணமாக மாவட்டம் முழுவதும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. தாமிரபரணி ஆற்றில் அதிக அளவுக்கு மேல் தண்ணீர் வந்ததால் பல்வேறு இடங்களில் தண்ணீர் தேங்கி பாதிப்பு ஏற்பட்டது. இந்த மழையானது நான்கு தென் மாவட்டங்களில் அதிக அளவு பாதிப்புகளை ஏற்படுத்தி உள்ளது.

மழையின் பாதிப்பை அறிந்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு பொறுப்பு அமைச்சர்களையும், உயர் அதிகாரிகளையும் அனுப்பி வைத்து மீட்பு பணிகளுக்கு உத்தரவிட்டார்கள். தொடர்ந்து மீட்பு பணிகளை துரிதப்படுத்த வும், கண்காணிக்கவும் கண்காணிப்பு அலுவலர்களை அனுப்பி வைத்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இந்த மழை பாதிப்புகளை பார்வையிட்டு நிவாரண உதவிகள் வழங்கி பணிகளை துரியப்படுத்த முதலமைச்சர் அவர்கள் தென் மாவட்டங்களுக்கு சென்று தென் மாவட்ட மக்களுக்கு உறுதுணையாக இருந்து மீட்பு பணிகளை மேற்கொண்டு உதவி புரிய என்னை உடனடியாக அனுப்பி வைத்தார்.

கரையோர மக்கள் மற்றும் தாழ்வானப் பகுதியில் உள்ள மக்கள் அனைவரையும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நேற்று காலை முதல் 75 நிவாரண முகாம்களில் 3500 நபர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு உணவு வசதி, குடிநீர் வசதி மற்றும் கழிப்பறை வசதி முறையாக மாவட்ட நிர்வாகம் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மழையின் அளவு நேற்றைய விட இன்று குறைந்துள்ளது. தண்ணீர் வடியத் தொடங்கியுள்ளது. இந்த வெள்ள பெருக்கினால் மாவட்டத்தில் மூன்று நபர்கள் உயிரிழந்துள்ளனர். நெல்லை சந்திப்பு சிந்துபூந்துறை பகுதியில் படகுகள் மூலம் தொடர்ந்து மீட்பு பணிகளில் ஈடுபட்டு வருகிறோம். மாவட்டத்தில் ஆய்வுப் பணிகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவரை 50,000 நபர்களுக்கு தரமான உணவு கொடுக்கப்பட்டுள்ளது. பொது மக்களுக்கு பால் கிடைப்பதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் இது குறித்து அறிவுறுத்தப்பட்டு 10 ஆயிரம் லிட்டர் பால் கொண்டு வருவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் இதுவரை 36 கிராமங்களில் வெள்ளிநீர் புகுந்துள்ளது வெள்ள நீர்களை வெளியேற்றும் பணிகள் நடைபெற்று வருகிறது. மாவட்டத்தில் உள்ள தாழ்வானப் பகுதியில் உள்ள மக்கள் அனைவரையும் நிவாரண முகங்களில் வரவழைத்து தங்கவைப் பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நாளை முதலமைச்சர் அவர்கள் டெல்லியில் சென்று பிரதமர் அவர்களை நேரில் சந்தித்து நிவாரணம் கோர உள்ளார். இன்னும் மூன்று நாட்களில் திருநெல்வேலி மாவட்டத்திற்குத் தேவையான நிவார ணத்தை அறிவிப்பார்கள். தமிழ்நாட்டு மக்களுக்கு இயற்கை சீற்றங்களால் எந்தவித பாதிப்பு களும் ஏற்படாமல் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டு தமிழ்நாடு மக்களை பாதுகாக்கும் அரசாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு செயல்பட்டு வருகிறது.

இவ்வாறு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே. எஸ். எஸ்.ஆர்.ராமச்சந்திரன், நிதி மற்றும் மனிதவள மேம்பாட்டு துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் எஸ்.கே.பிரபாகர், மாவட்ட கண்காணிப்பு அலுவலர் டாக்டர்.செல்வராஜ், கூடுதல் வருவாய் ஆணையர் கோ.பிரகாஷ், மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான், நாடாளுமன்ற உறுப்பினர் ஞான திரவியம், பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப், நெல்லை மாநகராட்சி மேயர் சரவணன், ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் சிவ கிருஷ்ணமூர்த்தி,

நெல்லை மாநகராட்சி ஆணையாளர் சுபம் தாக்கரே ஞானதேவ்ராவ், மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன், துணை மேயர் ராஜ் உள்பட அரசு அலுவலர்கள் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



நெல்லையில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நெல்லை சந்திப்பு சிந்து பூந்துறை மக்களுக்கு உணவு மற்றும் அரிசி, போர்வை போன்ற அத்தியாவசியப் பொருட்களை சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு, நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் வழங்கினர். நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், அப்துல்வஹாப் எம்.எல்.ஏ. தலைமைச் செயற்குழு உறுப்பினர் பிரபாகரன், மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் ஜெகதீஷ் மத்திய மாவட்ட துணை செயலாளர் சுரேஷ், துணை மேயர் ராஜ், ஒன்றிய செயலாளர் ஜோசப் பெல்சி, இளைஞர் அணி அமைப்பாளர் ஜான் ரபீந்தர் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



நெல்லை மாவட்டத்தில் வெள்ளத்தின் காரணமாக மீட்புப் பணிகளில் படகுகள் மூலம் மக்களை மீட்ட மீனவப் பெருமக்களை நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தார். உடன் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ., தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன் ஆகியோர் உள்ளனர்.